DEPOSITION OF WITNESS

IN THE COURT OF PRINCIPAL LABOUR COURT, COIMBATORE.

**CP.No.** 3/2025

| | |
|---|---|
| DEPOSITION OF WITNESS | RW1 |
| NAME | வர்க்கீஸ் |
| FATHER NAME | செல்வராஜ் |
| ADDRESS | 9/1190, அண்ணா நகர், வால்பாறை, கோயம்புத்தூர் |
| AGE | 73 |

Solemnly affirmed in accordance with provision of Act x of 1875.

Date.09.02.2026

**முதல் விசாரணை –**

இவ்வழக்கில் எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தததை பெற்று கொண்டேன். அதை பெற்று கொண்டு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

நான் வால்பறை workers union ன் 2006 முதல் பொது செயலாளராக உள்ளேன். மனுதாரர்க்கு இலகுவான வேலை கொடுக்க வேண்டும் என்று inspector of Plantation (Medical board) என்பவரிடம் கேட்டோம். அவர் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு மனுதாரருக்கு இலகுவான பணி வழங்க வேண்டும் என்று உபதேசித்தார். அவரின் அறிவுரையின் படி

நிர்வாகம் இலகுவான பணி மனுதாரர் யோப்புதுரைக்கு தர மறுத்ததால் ஊட்டி மருத்துவர் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு நேரில் வந்து ஆஜராகி மீண்டும் எதிர்மனுதாரரின் HR க்கு அறிவுரை வழங்கினார். அதன் பின்னிட்டு HR எதிர்மனுதாரர் நிறுவனத்தின் மேலதிகாரியை கேட்டு பதில் தருவதாக கூறினார். அவ்வாறே கூறி நீண்ட காலதாமதம் ஆகியும் மனுதாரருக்கு தேயிலை பறிக்கும் வேலையை தான் கொடுத்தார்கள். அதைவிட இலகுவான வேலை இல்லை என்று கூறிவிட்டார்கள். அதற்கு பின்னிட்டு தான் நான் மனுதாரருக்காக தொழிற்தாவா ID 110/2022 எழுப்பினேன். அதில் உத்தரவு பிறப்பித்த பிறகும் எதிர்மனுதாரர் நிர்வாகம் 16.08.2024 ல் இலகுவான வேலையை கொடுத்தார்கள். மனுதாரர் அந்த வேலையை செய்து வருகிறார். எதிர்மனுதாரர் நிறுவனத்தில் மனுதாரருக்கு கொடுக்கின்ற வேலை contract basis ல் உள்ளது என்றால் இல்லை. மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் permanent employee ஆக தான் வேலை செய்து வருகிறார். நிர்வாகம் மனுதாரருக்கு பின் சம்பளம் தீர்ப்பின் அடிப்படையில் கணக்கீடு செய்து கொடுப்பதாக சொன்னார்கள். பின்னிட்டு எதிர்மனுதாரர் நிர்வாகம் ஒரு கண்க்கீடு சொன்னார்கள். அந்த கணக்கீடு தவறு என்று நானும், மனுதாரரும் நிர்வாகத்திடம் சொன்னோம். மீண்டும் எதிர்மனுதாரர் நிர்வாகம்

மேலதிகாரியை கேட்டு சொல்கிறோம் என்று கூறினார்கள். அதற்கு பின்னிட்டி மனுதாரருக்கு வேலை கொடுத்தார்கள். அதற்கு பின்னிட்டும் மனுதாரருக்கு கொடுக்க வேண்டிய பின்சம்பளம் மற்றும் இதர பணபலன்கள் கணக்கிட்டு வழங்கவில்லை. இன்றயை தேதி வரை மனுதாரர் தேயிலை factoryயில் தான் தொழிலாளர்களுக்காக தேநீர் தயாரிக்கும் பணியில் அமர்த்தப்பட்டு இன்று வரை அந்த பணியை தான் செய்து வருகிறார். மனுதாரர் பிடிவாதமாக இருந்து Ex P4 கடிதத்தை தன்னிச்சையாக எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு அனுப்பியதாக சொன்னது பற்றி எனக்கு தெரியாது. அதற்கு 16.07.2024 ல் Ex P6 பதில் கடிதம் அனுப்பியதை பற்றியும் எனக்கு தெரியாது. மனுதாரருக்கும், எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கும் இடையில் நடந்த விவரங்கள் குறித்து எனக்கு மனுதாரரை மீண்டும் வேலைக்கு அமர்த்திய பின்பில் இருந்து தெரியாது.

குறுக்குவிசாரணை

ID 110/2022 வழக்கின் தீர்ப்பு 08.04.2024 அன்று தொழிலாளர் துணை ஆணையர் சமரசம் 3, கோயம்புத்தூர் அவர்களது அறிவிப்பு பலகையில் வெளியிடப்பட்டு நடமுறைக்கு வந்தது என்று சொன்னால் சரிதான். 08.04.2024க்கு பிறகு நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில்

மனுதாரருக்கு தீர்ப்பின் அடிப்படையில் இலகு பணி வேண்டும் என்று கோரினோம் என்றால் சரிதான். நானும் கேட்டேன், மனுதாரர் தனிப்பட்ட முறையிலும் கேட்டார். எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரருக்கு உடனடியாக இலகு பணியையும் வழங்கவில்லை. காலதாமதம் செய்து 16.08.2024 அன்று தான் பணி வழங்கினார்கள். எதிர்மனுதாரர் நிர்வாகம் மேலதிகாரியை கேட்டு இலகு பணி வழங்குவதாக சொல்லிவிட்டு காலதாமதம் செய்து வந்தார்கள். மனுதாரர் பணியில் இருந்து நீக்கம் செய்யப்பட்ட காலத்திலிருந்து மீண்டும் பணியில் அமர்த்தப்பட்ட காலம் வரையில் உள்ள பணப்பலன்களை வழங்க நிர்வாகம் கடமைப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.